பொருளடக்கம்



1 நாம் ஏன் பிறந்தோம்? 9

1. படைப்புகள் வீணாகப் படைக்கப்படவில்லை 11
2. வாழ்க்கை ஒரு சோதனை 12
3. இறுதி முடிவு 12

2 நாம் எப்படி இறைவனை நம்ப வேண்டும்? 14

1. இறைவன் இருக்கின்றானா, இல்லையா? 14
2. இறைவன் குறித்த தவறான நம்பிக்கைகள் 19
3. இறைவன் ஒருவனா, பலரா? 21
4. அந்த ஓர் இறைவன் யார்? 24
5. அல்லாஹ்வின் உள்ளமை 26
6. அல்லாஹ்வின் வல்லமை 29
7. அவனுக்குச் சந்ததி, இணை துணை, உதவியாளன் இல்லை: 30
8. அல்லாஹ் அளவற்ற அருளாளன் 31
9. அல்லாஹ் நீதியாளன் 32
10. அல்லாஹ் உங்களை மன்னிக்க அழைக்கின்றான் 33
11. இறைநம்பிக்கை இறைவனிடம் ஏற்கப்பட! 33

3 நாமே இறைவனுக்கு உருவம் கொடுப்பது சரியா? 35

1. இறைவனைப் பற்றி அறிய ஒரே வழி 36
2. பாதுகாக்கப்பட்ட வேதம் 37
3. இறைவன் எப்படிப்பட்டவன்? 38
4. இறைவனுக்கே உரிய உருவமைப்பு 40
5. மனிதன் இவ்வுலகில் இறைவனைக் காண முடியுமா? 43
6. இறைவனை மனிதன் எப்பொழுது காண முடியும்? 45

7. இறைவனுக்கு அவதாரம் தேவையா? 47
8. படைப்பாளனின் அந்தஸ்தும் படைப்பினங்களோடு அவனது தொடர்பும் 50
9. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யார் இருக்க முடியும்? 53
10. திருக்குர்ஆன் கூறும் முறையில் இறைவனிடம் பிரார்த்திப்போம் 56

4 நாம் ஏன் இறைத்தூதர்களைப் பின்பற்ற வேண்டும்? 60
1. எல்லா மக்களுக்கும் தூதர்கள் 61
2. தூதர்கள் கடவுளும் அல்லர்; கடவுள் தன்மைகளில் எதையும் பெற்றவர்களும் அல்ல 62
3. ஈசா - இயேசுவுக்குத் தரப்பட்ட தூதுத்துவப் பொறுப்பு 64
4. முஹம்மது ﷺ அவர்களின் வருகையைப் பற்றி இயேசுவின் முன்னறிவிப்பு 66
5. முஹம்மது ﷺ ஓர் இறுதித்தூதர்! தூதர்களின் முத்திரை! 66
6. முஹம்மது ﷺ – இறுதித்தூதர் ஏன்? 67
7. முஹம்மது ﷺ அகிலத்தாருக்கு ஓர் அருட்கொடை 68
8. உண்மையான ஒரே இறைவனை வணங்க, முஹம்மது ﷺ அவர்களையே பின்பற்ற வேண்டும் 77

5 நாம் ஏன் இயேசுவை முஸ்லிம் என்கிறோம்? 80
1. மரியாள், இயேசு மற்றும் அவரின் சீடர்கள் அனைவரும் முஸ்லிம்களே 80
2. இயேசு – அல்லாஹ்வின் தூதர் 88
3. இயேசு, சிலுவையில் அறையப்படவே இல்லை 93
4. ஆதிபாவத்தின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட சிலுவை மரணக் கதை 96
5. கிறித்துவர்களே, இதோ! அல்லாஹ் உங்களை இரட்சிப்பின் பக்கம் அழைக்கிறான் 98
6. அல்லாஹ்வின் நற்செய்தி 100
7. மனித குலத்திற்கு அல்லாஹ்வின் அழைப்பு 100
8. அல்லாஹ்வின் எச்சரிக்கை 101

6 நாம் இப்படியே விட்டுவிடப்படுவோமா? 106
1. மரணத்தைப் போல் மறுமையும் நிச்சயமானது! 108
2. நிச்சயம் உயிர்ப்பிக்கப்படுவோம் 108
3. நிச்சயம் விசாரிக்கப்படுவோம் 112
4. பதிவேடுகள் வெளியாகும் 113
5. நன்மையும் தீமையும் எடை போடப்படும் 115
6. சொர்க்கமும் நரகமும் உண்மையே! 116
7. வெற்றிக்கு வழி 117
7 நாம் இங்கு வாழ்வதின் நோக்கமென்ன? 118
1. செல்வம் வாழ்க்கையின் நோக்கமாகுமா? 118
2. வாழ்க்கையின் நோக்கம் – அல்லாஹ்வை வணங்குவதுதான் 119
3. இவ்வுலக வாழ்க்கை ஒரு தேர்வுக்காலம் 121
4. மறுமையின் நிலையான வாழ்க்கை 123
5. வெற்றி அல்லது தோல்வி 124
8 நாம் ஏன் இஸ்லாமை பின்பற்ற வேண்டும்? 127
1. இஸ்லாமிய இறைக்கொள்கையின் அடிப்படைகள் 129
2. இஸ்லாமின் ஐந்து தூண்கள் 131
3. சமூக நல்லொழுக்கங்கள் 132
9 நாம் வாழ்க்கையை வழிபாடாக்குவது எப்படி? 134
1. நன்மைகள் - ஓர் இஸ்லாமியப் பார்வை 135
2. நற்செயல்கள் - இறைநம்பிக்கையின் ஓர் அம்சமே! 136
3. முதன்மையான இறைவழிபாடுகள் 139
10 நாம் எப்படிப்பட்ட நற்பண்புகளுடன் வாழ வேண்டும்? 143
1. நன்மையின் மூலம் தீமையை மாற்றுதல் 146
2. நற்பண்புகளும் நற்குணமும் 147
3. முஸ்லிமல்லாதவர்களிடம் நீதியாக, அன்பாக நடப்பது 147
4. இஸ்லாம் கூறும் முகமன் 148
5. உங்கள் விருந்தாளிகளைக் கண்ணியப்படுத்துங்கள் 148
6. மற்றவர்களின் உடைமைகளை மதித்தல் 149

7. பூமியில் பணிவாக நடங்கள் 151
8. பட்டப்பெயர்களைச் சூட்டாதீர்; பிறரை இழிவாகக் கருதாதீர் 152
9. அல்லாஹ் உங்களை நேசித்தால் மக்களும் உங்களை நேசிப்பார்கள் 152
10. பிறரின் குறைகளை மன்னித்துவிடுதல் 152
11. உறுதியான முஸ்லிமாக இருப்பது எப்படி? 153

இந்த வடிவில் அறபுச் சித்திர எழுத்துகள் பல வாக்கியங்களின் நடுவே இந்நூலில் காணப்படும். இவை பிரார்த்தனைகளாகும். நல்லோர்களை நினைவுகூரும்போது அவர்களை வாழ்த்தக்கூடிய இஸ்லாமியப் பண்பாட்டைப் பின்பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றின் ஒலிபெயர்ப்பு மற்றும் பொருள் பின்வருமாறு:

ﷺ இது நபிகளாரின் பெயரை அடுத்து வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' பொருள்: அல்லாஹ்வின் அருளும் சாந்தியும் அவர்கள்மீது உண்டாவதாக.

رضي الله عنه இது நபித்தோழர்களின் பெயர்களை அடுத்து வரும். இதன் ஒலி பெயர்ப்பு: 'ரளியல்லாஹு அன்ஹு' பொருள்: அவர்மீது அல்லாஹ் திருப்தியடைவானாக.

رضي الله عنها இது நபியின் மனைவிகள், தோழிகளின் பெயர்களை அடுத்து வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'ரளியல்லாஹு அன்ஹா' பொருள்: அவர்மீது அல்லாஹ் திருப்தியடைவானாக.

عليه السلام இது நபிகளாருக்கு முந்திய தூதர்கள், நல்லோர்களின் பெயர்களை அடுத்து வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'அலைஹிஸ்ஸலாம்' பொருள்: அவர்களுக்குச் சாந்தி உண்டாவதாக.

رحمه الله இது இறந்துவிட்ட அறிஞர்கள், பெரியோர்களின் பெயர்களுக்குப் பின்வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'ரஹிமஹுல்லாஹ்' பொருள்: அவர்மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக.

1

நாம் ஏன் பிறந்தோம்?

❀

வாழ்க்கையில் ஒவ்வொரு விசயத்திற்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. நாம் பயன்படுத்தும் பேனாவாக இருந்தாலும், உடுத்தும் ஆடையாக இருந்தாலும், அதில் நோக்கம் இல்லாமல் இல்லை. அனைத்தையும் அறிந்தவனும் நன்கு பார்த்துக்கொண்டிருப்பவனுமான அல்லாஹ் நம்மைப் படைத்திருப்பதிலும் ஏதேனும் நோக்கம் இருக்க வேண்டும். அதுதான் நாம் இங்கு வாழ்ந்துகொண்டிருப்பதின் பொருளை உணர்த்தும்.

நீங்கள் யாரிடமேனும் ஏன் உண்ணுகிறீர்கள் என்று கேட்டால் அல்லது நாம் ஏன் உண்ணுகிறோம் என்று கேட்டால், ஒவ்வொருவரும் அதன் நோக்கத்தைக் கூறுவார்கள். உடல் ஆரோக்கியத்திற்காக உண்கிறோம். அப்போதுதான், உயிர்வாழ முடியும். அதே போல் நீங்கள் யாரிடமேனும் ஏன் வேலை செய்கிறீர்கள் என்று கேட்டால், உடனே அவர்கள் அதன் மூலம் சம்பாதிக்க முடியும், நம்மையும் நமது குடும்பத்தையும் காப்பாற்ற முடியும் என்று கூறுவார்கள். இது போன்றே நீங்கள் ஏன் தூங்குகிறீர்கள், ஏன் துணிகளைத் துவைக்கிறீர்கள், ஏன் உடுத்துகிறீர்கள் என்று நிறைய கேள்விகளைக் கேட்கலாம். அனைத்துக்கும் பொருத்தமான பதில்கள் கிடைக்கும். எல்லா மனிதர்களும் அந்தந்த காரியங்களின் நோக்கத்தைத் தெரிந்து வைத்திருப்பார்கள். இதில் மொழி வேறுபாடுகள் எதுவும் இல்லை. அனைவருமே ஒரே மாதிரியான பதில்களைத்தான் சொல்வார்கள். எங்கிருப்பவர்களும் இக்காரியங்களின் நோக்கத்தை ஒரே மாதிரியாகத்தான் புரிந்து வைத்திருக்கிறார்கள். இத்தருணத்தில் நீங்கள் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். அதாவது, நீங்கள் ஏன் இந்த உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? உங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன? - இதற்குரிய பதில்களைக் கவனித்தால் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு மாதிரியான பதில்கள் வரும். வேறுபட்ட பதில்களைக் காண்பீர்கள். இதற்குக் காரணம்

4

நாம் ஏன் இறைத்தூதர்களைப் பின்பற்ற வேண்டும்?

❀

அல்லாஹ்வின் மீதான நம்பிக்கைக்கு அடுத்து, இஸ்லாம் மிகவும் வலியுறுத்தியிருப்பது தூதர்கள் மீதான நம்பிக்கையாகும். எப்படி வணங்க வேண்டும்? அல்லாஹ்வுக்குப் பிடித்தமானவை எவை? வெறுப்பானவை எவை? நீதி எது? அநீதி எது? என்பனவற்றை அல்லாஹ் தன் தூதர்கள் வழியாகவே மக்களுக்குக் கற்பித்தான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَا كَانَ لِبَشَرٍ أَنْ يُكَلِّمَهُ اللَّهُ إِلَّا وَحْيًا أَوْ مِنْ وَرَاءِ حِجَابٍ أَوْ يُرْسِلَ رَسُولًا فَيُوحِيَ بِإِذْنِهِ مَا يَشَاءُ إِنَّهُ عَلِيٌّ حَكِيمٌ

‘அல்லாஹ் (நேருக்கு நேராகப்) பேசுவதற்குரிய தகுதி மனிதரில் ஒருவருக்கும் இல்லை. எனினும், உள்ளத்தில் உதிப்பை ஏற்படுத்தும் (வஹ்யி எனும்) விஷேச அறிவிப்பின் மூலமாகவோ, திரைக்கு அப்பாலிருந்தோ, வானவர்களை அனுப்பிவைத்து அறிவிப்பதின் மூலமாகவோ தனக்கு விருப்பமான கட்டளையை (மனிதனுக்கு) அறிவிக்கின்றான். (ஏனென்றால்,) நிச்சயமாக அவன் மிக மேலானவனும் மிக ஞானமுடையவனுமாவான்.’ (குர்ஆன் 42:51)

உலகில் அதர்மமும் தீமைகளும் பெருகும்போது, அவற்றை அழித்துத் தர்மத்தை (நன்மையை) நிலைநாட்ட இறைவனே இறங்கி அவதாரமெடுப்பதாகச் சிலர் நம்புகின்றார்கள். ஆனால், இது, இறைவனின் மேன்மைக்கும் மகத்துவத்திற்கும் களங்கம் கற்பிக்கிற நம்பிக்கையாகும். உண்மையில், ‘கம்பீரமும் கண்ணியமும் மிக்க அந்த இறைவனின் எதிரில் நின்று நேருக்கு நேராகப் பேசுகிற தகுதிகூட மனிதர்களில் எவருக்குமில்லை. தான் தேர்ந்தெடுத்த தூதர்களிடம் கூட அவன் தனது (வஹ்யி எனும்) விஷேச அறிவிப்பு

மூலமாகத்தான் பேசுகிறான்.' அத்தூதர்கள் வழியாகத்தான் மனிதர் களுக்குத் தர்மத்தையும் நேர்வழியையும் போதிக்கிறான்.

இஸ்லாம் இந்த தூதுத்துவ நம்பிக்கை மூலம், இறைவனின் நேர்வழி காட்டலைப் பற்றிய விழிப்புணர்வை மனிதர்களுக்கு ஏற்படுத்துகிறது. தன் இறைவனை நேரில் காணாவிட்டாலும், அவன் தன்னிடம் எதை விரும்புகிறான், எதை வெறுக்கிறான் என்ற அறிவை ஒருவனுக்குக் கொடுக்கிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு விசயத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கற்றுத்தருகிறது. அல்லாஹ்வின் தூதர்கள் மனித வாழ்வின் எல்லா விசயங்களுக்கும் வழிகாட்டினார்கள். அவர்கள் மனித இனத்திலி ருலிந்தே தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மக்களாக இருந்தார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை மக்களுக்குப் பிரசாரம் செய்து, அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களாக இருந்தார்கள்.

1. எல்லா மக்களுக்கும் தூதர்கள்

அல்லாஹ் தன் தூதர்களை எல்லாச் சமுதாய மக்களுக்கும் அனுப் பினான். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنْ مِنْ أُمَّةٍ إِلَّا خَلَا فِيهَا نَذِيرٌ

'அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வராத எந்தச் சமுதாயத்தினரும் (பூமியில்) இருக்கவில்லை.' (குர்ஆன் 35:24)

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولًا

'(பூமியின் பல பகுதிகளிலும் வசித்திருந்த) ஒவ்வொரு சமுதாயத் தினருக்கும் நிச்சயமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம்.' (குர்ஆன் 16:36)

இறுதித்தூதருக்கு முந்தியக் காலத்தில் ஒவ்வொரு மொழி பேசுவோ ருக்கும் அவரவர் மொழியில் தூதர்களை அல்லாஹ் அனுப்பினான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ لِيُبَيِّنَ لَهُمْ

'ஒவ்வொரு தூதரும் தம் மக்களுக்குத் தெளிவாக விவரித்துக் கூறும் பொருட்டு, அந்தந்த மக்களின் மொழியைக்கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பிவைத்தோம்.' (குர்ஆன் 14:4)

5

நாம் ஏன் இயேசுவை முஸ்லிம் என்கிறோம்?

❀

'இயேசு முஸ்லிமா?' என்ற திகைப்புடன்தான் இத்தலைப்பை நீங்கள் வாசிப்பீர்கள். 'இயேசுவுக்கும் இஸ்லாமுக்கும் என்ன சம்பந்தம்? இயேசு எப்படி முஸ்லிமாவார்? கிறித்துவமும் இஸ்லாமும் வேறு வேறு மதங்களாயிற்றே!?' என்றும் நீங்கள் புரியாமல் விழிப்பீர்கள். ஆனால், உண்மை இதுதான்: இயேசு ஒரு முஸ்லிம். அவர் இஸ்லாமிய அழைப்புவிடுத்தார். அவரின் பிரச்சாரமெல்லாம் இஸ்லாமியப் பிரசாரமாகவே இருந்தன. அல்லாஹ்வை வணங்கும் படியே மக்களை அழைத்தார். ஒருபோதும் அவர் தம்மை வணங்கும் படிக் கட்டளையிட்டதில்லை. தம்மைத் தேவகுமாரன் என்றும் கூறிக்கொள்ளவில்லை. மாறாக, அல்லாஹ்வின் அடிமையும், அவனால் அனுப்பப்பட்ட தூதருமாகவே தம்மைப் பிரகடனப் படுத்தினார். அவரும் அவரின் தாய் மரியாளும் முஸ்லிம்களாகவே வாழ்ந்தனர். அவரின் சீடர்களும் முஸ்லிம்களே.

1. மரியாள், இயேசு மற்றும் அவரின் சீடர்கள் அனைவரும் முஸ்லிம்களே

அல்லாஹ்வின் பரிசுத்த வேதாகமமான குர்ஆனில் மரியாள், இயேசு மற்றும் அவரின் சீடர்கள் அனைவருடைய உண்மை வரலாறுகளும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் இஸ்லாமிய மதத்தையே பின்பற்றினர். இஸ்லாமின் அடிப்படைக் கொள்கைப்படி, அல்லாஹ் ஒருவனையே வணங்கினர். அவனையே தொழுதனர்; நோன்பு நோற்றனர்; ஸகாத் (கட்டாய தர்மம்) கொடுத்து வந்தனர்.

மரியாளின் வரலாற்றைக் குர்ஆன் மிக அழகாகத் தொடங்குகிறது. அவரையும் அவரின் குடும்பத்தாரையும் உலக மக்கள் அனைவரையும்விட மேலானவர்களாக அல்லாஹ் தேர்ந்தெடுத்தான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ اللَّهَ اصْطَفَى آدَمَ وَنُوحًا وَآلَ إِبْرَاهِيمَ وَآلَ عِمْرَانَ عَلَى الْعَالَمِينَ ذُرِّيَّةً بَعْضُهَا مِنْ بَعْضٍ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ

‘நிச்சயமாக அல்லாஹ் ஆதமையும், (அவருக்குப் பின்னர்) நூஹையும் (அவ்வாறே) இப்றாஹீமுடைய குடும்பத்தையும், இம்ரானுடைய குடும்பத்தையும் அகிலத்தாரைவிட மேலாகத் தேர்ந்தெடுத்தான். அவர்களில் ஒருவர் மற்றவருடைய சந்ததிதான். அல்லாஹ் (அனைத்தையும்) செவியுறுபவன்; நன்கு அறிபவன். (குர்ஆன் 3:33-34)

ஆதம் (ஆதாம்), முதல் மனிதராவார். அவரிலிருந்தே இம்மனிதகுலம் பல்கிப் பெருகியது. இவ்வுலக அழிவு நாள்வரை வர இருக்கின்ற எல்லா மனிதர்களுக்கும் தந்தையாக அல்லாஹ் அவரைத் தேர்ந் தெடுத்தான். நூஹ் (நோவா), முதல் தூதர் (ரசூல்) ஆவார். அல்லாஹ்வை விட்டுவிட்டு அவன் படைப்புகளை வணங்கிவந்த மக்களை நேர்வழிக்கு அழைக்க, இவரையே அல்லாஹ் முதல் தூதராகத் தேர்ந்தெடுத்தான்.

இப்றாஹீம் (ஆப்ரகாம்), மனித குலம் அனைத்திற்கும் இமாம் (தலைவர்) ஆவார். மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்து நேர்வழி காட்டக்கூடிய ஏராளமான தூதர்கள், இவரின் சந்ததியில்தாம் தோன்றினர். அனைவருக்கும் தலைவராக அல்லாஹ் அவரைத் தேர்ந்தெடுத்தான். இவ்வாறே அல்லாஹ், இம்ரானுடைய குடும்பத் தையும் தேர்ந்தெடுத்தான். இவரின் மகளே மரியாள் (மர்யம்).

அல்லாஹ் கூறுகின்றான்:

إِذْ قَالَتِ امْرَأَتُ عِمْرَانَ رَبِّ إِنِّي نَذَرْتُ لَكَ مَا فِي بَطْنِي مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّي إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ فَلَمَّا وَضَعَتْهَا قَالَتْ رَبِّ إِنِّي وَضَعْتُهَا أُنْثَى وَاللَّهُ أَعْلَمُ بِمَا وَضَعَتْ وَلَيْسَ الذَّكَرُ كَالْأُنْثَى وَإِنِّي سَمَّيْتُهَا مَرْيَمَ وَإِنِّي أُعِيذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ فَتَقَبَّلَهَا رَبُّهَا بِقَبُولٍ حَسَنٍ وَأَنْبَتَهَا نَبَاتًا حَسَنًا وَكَفَّلَهَا زَكَرِيَّا كُلَّمَا دَخَلَ عَلَيْهَا زَكَرِيَّا الْمِحْرَابَ وَجَدَ عِنْدَهَا رِزْقًا قَالَ يَا مَرْيَمُ أَنَّى لَكِ هَذَا قَالَتْ هُوَ مِنْ عِنْدِ اللَّهِ إِنَّ اللَّهَ يَرْزُقُ مَنْ يَشَاءُ بِغَيْرِ حِسَابٍ

இம்ரானுடைய மனைவி (கர்ப்பமானபொழுது, அவர் தமக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென விரும்பி,) ‘என் இறை

6

நாம் இப்படியே விட்டுவிடப்படுவோமா?

❀

இவ்வுலகில் எந்த மனிதரும் மறுக்க முடியாத, யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லாத ஓர் உண்மை உண்டு. அதுதான் மரணம். பிறந்தவர் யாராக இருப்பினும் மரணித்தே ஆகவேண்டும். பிறப்பும் இறப்பும் பிரிக்க முடியாத அம்சங்கள். இறக்கக் கூடாதென்றால் பிறக்காமல் இருக்க வேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை. இறப்பே இல்லாதவன் இறைவன் மட்டுமே. அவனுக்குப் பிறப்பில்லை; அதனால் இறப்பும் இல்லை. அல்லாஹ் கூறுகிறான்:

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ وَيَبْقَى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ

'பூமியிலுள்ள அனைத்தும் அழிந்தே போகும். மிக்க கண்ணியமும் பெருமையும் தங்கிய உம் இறைவனின் முகம் மட்டும் (அழியாது) நிலைத்திருக்கும்.' (குர்ஆன் 55:26,27)

எனவே, நிச்சயமாக நாம் இங்கே நிரந்தமாக இருக்கப்போவதில்லை. எந்த ஆண்டில், எந்த நாளில், எந்த நேரத்தில் நம்மை மரணம் கவ்விக்கொண்டுவிடும் என்பதை அறியமாட்டோம்.

அல்லாஹ் கூறுகின்றான்:

أَيْنَمَا تَكُونُوا يُدْرِكْكُمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِي بُرُوجٍ مُشَيَّدَةٍ

'நீங்கள் எங்கிருந்தாலும் மரணம் உங்களை அடைந்தே தீரும்; மிகப் பலமான உயர்ந்த கோட்டை கொத்தளத்தின் மீது நீங்கள் இருந்தாலும் சரியே! (மரணத்தை உங்களால் தடுக்க முடியாது!)' (குர்ஆன் 4:78)

நீங்கள் பல கோடிகளுக்கு அதிபதியாக இருக்கலாம்; ஆயினும், அந்தக் கோடிகளால் மரணத்தை விலைபேச முடியாது. கோடிகளுக்கும் மரணமுண்டு; கோடீஸ்வரனுக்கும் மரணமுண்டு. நீங்கள் பல பதவிகளுக்கு அதிகாரியாக இருக்கலாம்; ஆயினும், எந்தப் பதவி

7

நாம் இங்கு வாழ்வதின் நோக்கமென்ன?

❀

என் வாழ்க்கையின் நோக்கமென்ன? உங்கள் வாழ்க்கையின் நோக்கமென்ன? நம் வாழ்க்கையின் நோக்கமென்ன? சிந்திக்கக் கூடிய மக்களிடம் இத்தகைய கேள்விகள் வருவதுண்டு.

பலரும் இக்கேள்விகளுக்குப் பலவிதமான பதில்களைக் கூறுவார்கள். சிலர், செல்வத்தை அதிகமதிகம் சம்பாதித்து மிகப் பெரிய செல்வந்தராகுவதே தங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்பார்கள். ஆனால், அப்படிப் பல கோடிகளுக்கு அவர்கள் அதிபதியான பின்னர் அவர்களது வாழ்க்கையின் நோக்கம்தான் என்ன? அதற்குப் பிறகு என்ன செய்வார்கள்? எதை நோக்கமாகக்கொள்வார்கள்? வாழ்க்கையின் நோக்கம், செல்வத்தைச் சேமிப்பதுதான் என்றால் அச்செல்வம் கிடைத்த பின்பு அவர்களுக்கு இவ்வுலகில் எந்த நோக்கமும் இல்லாமலாகிவிடுகிறது. உண்மை என்னவென்றால், பல கோடிகளை அடைந்த பிறகும் பல செல்வந்தர்களின் வாழ்க்கை நிம்மதியில்லாமல் கழிகின்றது. நோய்களாலும் பிற பிரச்சினைகளாலும் துயரத்தில் மூழ்கிக் கிடக்கின்றார்கள். எல்லா வசதிகளும் இருந்தும், எதுவுமே இல்லாதவர்கள் போல் வாழவேண்டிய சூழ்நிலையில் தவிக்கின்றார்கள்.

1. செல்வம் வாழ்க்கையின் நோக்கமாகுமா?

நாம் பல முறை கேள்விப்பட்டிருப்போம். பல கோடிகளை உடைய செல்வந்தர்களும் தற்கொலை செய்துகொண்டு சாகிறார்கள். ஏன், அவர்கள் தங்களின் மனைவி, பிள்ளைகளுடனும் தற்கொலை செய்துகொள்கிறார்கள். இப்போது கேள்வி இதுதான்: செல்வத்தைக் குறிக்கோளாகக்கொண்ட வாழ்க்கை மட்டுமே ஒருவரை மகிழ்ச்சிப்படுத்திவிடுமா? ஒருபோதும் இல்லை. ஆம்! செல்வம் திரட்டுவதே வாழ்க்கையின் நிலையான நோக்கமாக ஆகமுடியாது. ஐந்து வயது குழந்தை, அது எத்தகைய செல்வந்த

8

நாம் ஏன் இஸ்லாமை பின்பற்ற வேண்டும்?

❀

இந்த மகத்தான பிரபஞ்சத்தைப் பற்றி எப்பொழுதாவது நாம் சிந்தித்ததுண்டா? இதுவும் இதிலுள்ள மற்றவையும் எப்படி உண்டாயின என்ற கேள்விக்கு விளக்கம் அறிந்ததுண்டா? ஒரு குடும்ப நிர்வாகம் நல்லபடி நடைபெற பொறுப்பான ஒரு குடும்பத் தலைவன் தேவை. அதை நாம் மறுப்பதில்லை. இதேபோல் ஓர் ஊருக்கு, ஒரு மாநிலத்திற்கு, ஒரு நாட்டிற்கு என நிர்வாகத் தலைவர்கள் அவசியப்படுகிறார்கள். இதை நாம் புரிந்து வைத்திருக்கிறோம். இப்போது சிந்தியுங்கள். இந்தப் பிரபஞ்சம் படைக்கப் பட்டு பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும், இதன் அமைப்பிலும் இயக்கத்திலும் எந்த ஒரு கோளாறோ, குளறுபடியோ இல்லை. இப்படியிருக்க இவை அனைத்தும் திடீரென்று தாமாகத் தோன்றியிருக்க முடியுமா? இந்த முழு உலகமும், இதில் வாழும் மனிதனும் அத்தகைய தற்செயல் நிகழ்வால்தான் தோன்றியிருப்பார்கள் என எப்படிக் கூற முடியும்? ஒருபோதும் முடியாது.

நாம் இந்த மகத்தான பிரபஞ்சத்தின் மிகச் சிறிய பகுதியையே அறிந்து வைத்திருக்கிறோம். உண்மையில், இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்தைக் கவனிக்கும்போது இதன் நுட்பமான கட்டமைப்பும் ஒழுங்கும் நம் கவனத்தை ஈர்க்கத்தான் செய்கிறது. அனைத்தும் திட்டமிட்டபடி நடப்பதை அறிய முடிகிறது. அதாவது, இவை அனைத்தையும் படைத்து, திட்டமிட்டு இயக்கி வருகின்ற ஓர் ஒப்பற்ற ஆற்றல் பெற்றவன் உண்டு என்பதை இது உணர்த்துகிறது.

அந்த உயர்ந்த படைப்பாளன்தான் நாம் காண்கிற இப்பிரபஞ்சத்தை அழகுடனும், கலை நயத்துடனும் படைத்தான். ஒவ்வொரு பொருளையும் திட்டமிட்ட விதிப்படி ஆக்கினான். ஆழமான அறிவுடைய மக்கள் அந்தப் படைப்பாளனைப் புரிந்துகொள்வார்கள். அவனை 'அல்லாஹ்' (இறைவன்) என்று அழைப்பார்கள்.

10

நாம் எப்படிப்பட்ட நற்பண்புகளுடன் வாழ வேண்டும்?

❀

மக்களில் பெரும்பாலானவர்கள் உங்களின் இறைநம்பிக்கை எந்த நிலையில் உள்ளது என்பதையோ, அல்லது உங்கள் வணக்க வழிபாடுகள் எப்படி என்பதையோ பார்க்கமாட்டார்கள். மாறாக, உங்கள் குணநலன்களையே கவனிப்பார்கள். உங்களின் பண்புகள் சிறந்தவையாக இருந்தால், உங்களின் இறைநம்பிக்கையின் மூலமும் கல்வியின் மூலமும் மக்கள் பலனடைவார்கள். உங்களின் வணக்க வழிபாடுகளையும் குணநலன்களையும் பின்பற்றுவார்கள். ஆனால், உங்களிடம் நற்பண்புகள் குறைவாக இருந்தால், உங்களின் கல்வியறிவு எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் அதைக் கண்டுகொள்ளமாட்டார்கள். எனவே, நற்பண்களைக் கைக்கொள்வது எல்லா முஸ்லிம்கள்மீதும் கடமையாகும்.

ஒருவர் நல்ல பண்புகளை அடைவதற்கு அவருடைய மனத் தூய்மை முக்கியமானது. அதில் அவர் தீர்மானமாக இருப்பது அவருக்கு உதவியாக இருக்கும். அதன் மூலமாக படிப்படியாக அவருடைய பண்புகளில் மாற்றம் ஏற்படும். குணங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறும். நிச்சயம் அவரில் மாற்றம் வருவது உறுதி. இப்படிச் சொல்லக் காரணம் தீய குணங்களை நேரடியாக உடனே நற்குணங்களாக மாற்றுவது சாத்தியமில்லை என்பதே. படிப்படியாகத்தான் மாற்ற முடியும். சிலர் தங்களின் தீய குணங்களை உடனே மாற்றிவிட முடியும் என்று நினைத்து அதை உண்மையில் மாற்ற முடியாமலே இருக்கின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் அந்த நற்செயலுக்காக தீவிர முயற்சி செய்யாததும், தங்கள் மனதைத் தாங்களே கேள்வி கேட்டுக்கொள்ளாததே ஆகும். எனவே, ஒவ்வொருவருக்கும் அவருடைய தவறுகளைச் சுட்டிக்காட்டி அவரை நன்மையின்பால் வழிகாட்ட வேண்டியது அவசியமாகும்.